காஞ்சி

ஆசிரியர் : அண்ணாதுரை

விலை 20 காசு

தம்பி

இதயம் வென்றிட 3

மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருக்கக் காணும்போது எவருக்கும் அடடா! ஒடிந்து விட்டதே! கொடியே இதனுலே கெட்டுப்போய்விடுமோ, காய்ந்துபோய்விடுமோ, இனி இந்தக் கொடியிலே அழகிய மலர்கள் பூத்திடாதோ! மணம் பரப்பிடாதோ! என்றெல்லாம் கூறிடத் தோன்றும், கவலை உண்டாகும்.

எருக்கஞ் செடி எருமையின் காலிலே சிக்கிக் கூழாகிப்போயினும், யார் அதைக்கண்டு கவலைகொள்வார்கள்!!

ஊருக்கே எழிலளித்து வரும் மணிமாடத்தின் சுவரிலே ஒருசிறு வெடிப்பு ஏற்பட்டால், காண்பவரெல்லாம் கவலைகொள்வார்கள்; இந்த வெடிப்பினுலே கட்டடத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடுமோ என்று அச்சம்கொள்வதால்; கலனுகிப்போய் கவனிப்பாரற்றுக்கிடக்கும் பாழுங்கிணற்றிலே மேலும் சிறிது கலன் காணப்பட்டால் கவலைகொள்வார் உண்டோ?

பட்டுச் சட்டையிலே ஒருபொட்டு மசி வீழ்ந்தாலும், எல்லோர் கண்களிலும் படுகிறது, என்ன இது! என்ன இது! என்று கேட்கிருர்கள்; குடுகுடுப்பாண்டியின் உடையிலே காணப் படும் கறைபற்றிக் கவலைப்படுவார் உண்டோ?

வீரனுடைய கரத்திலே வீழ்ந்துவிட்ட 'வெட்டு' எல்லோருடைய கவனத்தையும் ஈர்க்கும்; உடற்கட்டைப்பார், இரும்புபோல! என்று கூறினுலும் வீணனுடைய உடலமைப்பிலே எவரும் கவனம் செலுத்தமாட்டார்கள்.

திருக்குறள் ஏட்டின்பேரிலே மைக்கூடு கைதவறிக் கவிழ்ந்துவிட்டால், பதறிப்போவோம்; பழைய பஞ்சாங்கத்திலே கறையான் குடியேறினுல்கூட கவலைகொண்டிடத் தோன்றுமா?

நாம் நல்லது என்று எண்ணி மதிப்பளித்திடும் எந்தப் பொருளுக்கேனும், ஏதோ காரணத்தால் ஏதாகிலும் ஒரு சிறு கெடுதல் ஏற்பட்டுவிட்டாலும், பதறிப்போகிருேம். அது அந்தப் பொருளிடம் நமக்கு இருக்கும் பற்று எந்த அளவு இருக்கிறது என்பதற்குச் சான்று!

தம்பி! மகிழ மரத்தடியிலே உதிர்ந்து கிடக்கும் பூக்களை, ஒவ்வொன்ருகப் பக்குவமாகப் பொறுக்கி எடுத்து மகிழ்ந்திடுவர் சிற்றிடையார்!! தேங்காய் ஓட்டுத் துண்டுகளை அல்ல!!

கழுத்தளவு தண்ணீரில் இறங்கிப் பறிக்கிருன் ஓர்காளை, அழகோவியமாகத் திகழ்ந்திடும் செந்தாமரையை—அவன் காலைச் சுற்றிக்கொள்ளும் பாசியைத் தூக்கி வீசிவிடுகிருன் மற்ருேர் பக்கம்.

தத்தமது கருத்துக்கு எவை எவை விரும்பத்தக்கன, மகிழ்ச்சி தரத்தக்கன என்று தோன்றுகின்றனவோ, அந்தப் பொருளினைப் பெற அவர்கள் முனைவதும், அந்த முயற்சியிலே ஈடுபடும்போது ஏற்படும் இடர்பாடுபற்றிக் கவலைகொள்ளாதிருப்பதும், முயற்சியிலே வெற்றி கிடைத்திடும்போது மகிழ்ச்சிகொள்வதும் இயற்கை.

பொழுதுசாயும் நேரம், உச்சிப்போது முதல் தேடித்தேடிக் கண்டிட முடியாது கவலை மிகுந்திருந்தவனுக்கு, அவன் தேடிவந்த மூலிகை, ஒருசிறு குன்றின்மீது இருப்பதாகச் 'சேதி' கிடைக்கிறது; கிடைத்ததும், இன்றைக்கு இதுபோதும், நாளையதினம் பார்த்துக்கொள்ளலாம்

என்ரு இருந்துவிடுவான்? ஒருக்காலும் இல்லை; அலுப் பினை மறந்திடுவான், அகமகிழ்ச்சியுடன், குன்று நோக்கி நடந்திடுவான்.

தாம் விரும்பும் பொருளைப் பெற்றிடும் முயற்சியில் ஈடுபடுவோருக்கும், இன்னலையே கன்னலாக்கிக்கொள் ளும் இயல்பு ஏற்பட்டுவிடும்.

ஆனுல், அத்தனைக் கஷ்டப்பட்டு அவன் கொண்டு வந்த மூலிகை, கடுங் காற்ருென்று வீசியதால், கரம் விட்டுக் கிளம்பி, காட்டிலே ஓர்புரத்திலே, கள்ளி காளான் மிகுந்த பகுதியிலே பறந்து சென்றுவிட்டால், அவன் எவ்வளவு பதறிப் போவான்!

வெறுங்கையுடன் வீடு திரும்புகிருன்; எடுத்த காரியந்தனை முடித்திடும் ஆற்றல் மிக்கவன் இவன் என்பதால், இல்லத்துள்ளோர், மூலிகை கொண்டு வருகிருன் என்று எண்ணிப் புன்னகை காட்டுகிருர் கள்; பெருமூச்செறிந்தபடி அவன், பட்டபாடு வீணு யிற்று! கரத்திலே சிக்கிற்று, கடுங்காற்று பறித்துக் கொண்டது! என்று கூறுகிருன்; கேட்போர் உள்ளம் என்னென்ன எண்ணும்!

தாம் விரும்பும் பொருள், மதித்திடும் பொருள், பெற்றிட வேண்டி, ஆற்றல் மிக்கவனை அதற்காக அனுப்பி வைத்திட, அவன் ஆயிரத்தெட்டு இன்னலைத் தாங்கிக்கொண்டு, பொருளைக் கண்டெடுத்து வருகிற வழியில், அவனையும் மீறியதோர் வலிவினுல் பறிக்கப் பட்டுப்போய்விடின், பொருளைப் பெறத் துடித்துக் கொண்டிருப்பவர்களின் மனம் என்ன பாடுபடும்!!

பெற்றிட வேண்டியதாக ஒரு பொருள் இருந்து, அதைப் பெற்றளிக்கும் ஆற்றல் மிக்கவன் அதைப் பெற முனைந்து, பெற்றிடுவான் என்ற நம்பிக்கை பெரும் அளவுக்கு எழுந்திட்ட நிலையில், பெற்றிட இயல வில்லை என்ருே, பெற்றிட முனைந்தேன், வேருெருவன் அதனைத் தட்டிப் பறித்துக்கொண்டு சென்ருன் என்ருே அப்பொருளைப் பெற்றளிக்கச் சென்றவன் வந்து கூறிடும்போது, பொருளைப் பெற்று மகிழ்ந்திடஎண்ணி ஆவலுடன் காத்துக் கிடந்தவர்களின் உள்ளம், உலைக் கூடம் ஆகிவிடும்.

பொருளின் அருமை, அதனிடம் ஏற்பட்ட விருப் பம், பொருளைப் பெற்றிட முடியும் என்ற நம்பிக்கை, அதனைப் பெறச் சென்றவனின் ஆற்றலிலே வைத் துள்ள நம்பிக்கை, இவற்றின் தன்மையைப் பொறுத் திருக்கிறது, பொருள் பெருததால் ஏற்படும் ஏமாற்றம், எரிச்சல், கவலை, வேதனை.

பஞ்சவர்ணக் கிளியைப் பக்குவமாகப் பிடித்திடச் சென்று, பாதிமரம் ஏறுகையில். அது பறந்து போய் விட்டது என்ருெருவன் கூறும்போது, கேட்பவர்கள், அடடா! அப்படியா! என்று பேசுவர், பரிவு காட்டி!

ஒரு மணி நேரமாகக் காத்திருந்தேன் கிடைக்க வில்லை என்ருெருவன் கூற, எதற்குக் காத்திருந்தாய் ஒரு மணி நேரம் என்று மற்றவன் கேட்க, ஒணுனுக்கு! என்று முன்னவன் சொன்னுல், மற்றவன், பேதையே! பேதையே! இதற்கா இத்தனை கவலை கொள்கிருய்! ஒரு ஓணுன் கிடைக்காததற்காகவா!! என்று கூறிக் கைகொட்டிச் சிரிப்பான்.

தர்மபுரியில், தம்பி! நாம் கட்டாயம் வெற்றி பெற் றுத் தருவோம் என்று, வெற்றி பெற்ருக வேண்டும் என்று மெத்தவும் விரும்பி, வெற்றி பெற்றளித்திடு வோம் என்று அழுத்தமாக நம்பிக்கொண்டிருந்தவர் கள் தமிழகத்திலே மிகப் பலர்—கழகத்துக்கு வெளியே கூட. தர்மபுரி வெற்றி இந்த நேரத்தில் மிகவும் விரும் பத்தக்கது என்பதிலேயும், அந்த வெற்றியைக் கழகம் பெற்றளிக்கும் ஆற்றல் உள்ளது என்பதிலேயும், அவர்கள் அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை கொண்டிருந் திருக்கிருர்கள்! அதனுல்தான், தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்ற 'சேதி' வந்ததும், அவர்களால் நம்பமுடியவில்லை, கவலை அவர்களை அலைக்கழித் திருக்கிறது.

தர்மபுரியில் தோற்றுப் போனதால், எல்லோருக் கும் ஏற்படுவதுபோல எனக்கும் கவலையும் வேதனையும் ஏற்பட்டது என்ருலும், அந்தக் கவலைக்கு இடையில்

> மக்கள் கழக வெற்றியை எவ்வளவு எதிர்பார்த்து இருந்திருக்கிருர்கள்,
>
> கழக வெற்றி நிச்சயம் என்று மக்கள் எத்துணை நம்பிக்கையுடன் இருந்திருக் கிருர்கள்,
>
> வெற்றி பெற்றிடத்தக்க ஆற்றல் கொண்டது கழகம் என்ற எண்ணம் எவ் வளவு அழுத்தமாக இருந்திருக்கிறது,

என்பவைகளை அறிந்துகொள்ள முடிகிறது; கவலை யையும் கலைத்துவிட்டு ஓர் இன்பப் புன்னகை எழு கிறது.

> கழகமாவது, வெற்றி பெறுவதாவது!
>
> கழகத்துக்கு ஏது அந்த வலிவு!
>
> கழகம் வெற்றி பெற்ருல் என்ன, தோற் ருல் என்ன!

என்ற இந்த முறையிலே, பற்றற்று, மக்கள் இருந்து விடவில்லை; உலகிலே கவனிக்கப்பட வேண்டிய விஷ யங்கள்எத்தனைஎத்தனையோ இருக்கின்றன. இப்போது கழகம் தர்மபுரியில் வெற்றி பெற்றதா இல்லையா என்ப திலா கவனம் செலுத்தவேண்டும்! என்று கூறி அலட் சியப் போக்கிலே இருந்துவிடவில்லை. கழகம் வெற்றி பெறவேண்டும், கழகம் வெற்றி பெறும், அந்தச் சேதி காதில் விழும், களிப்பு கிடைத்திடும் என்று மக்கள் மிக்க ஆவலுடன் இருந்திருக்கிருர்கள். ஆகவேதான், கழகம் தர்மபுரியில் தோற்றுவிட்டது என்றதும், அவர் கள் திடுக்கிட்டுப் போயினர், துயர் கப்பிக்கொண்டது.

ஒரு பத்து ஆண்டுகளுக்கு முன்பு, கழகம் ஒரு தேர்தலிலே ஈடுபடும்போது, வெற்றி யாருக்கு என்பது

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

மலர் 1 9—5—65 இதழ் 39

நாட்டைக் காப்போம்

அண்டை நாடு அன்புள்ள நாடாக இருக்க வேண்டும். ஆனால் எப்படியோ பாகிஸ்தான் இந்தியாவிடம் பகையை வளர்த்துக்கொண்டது. இருவேறு நாடுகளாக அரசியல் வகையில் பிரிந்திருந்தாலும், பல வகையில் பாகிஸ்தானும் இந்தியாவும் ஒன்றுபட்டிருக்கக்கூடிய இயல்புகளைப் பெற்றிருக்கின்றன. இன்று அப்படி இல்லாமல் பகை முற்றியிருக்கின்றது.

முற்றிய பகைமையின் காரணமாகப் பாகிஸ்தான் இந்தியாவுக்குச் சொந்தமான மண்ணில் காலடி வைத்து உரிமை கொண்டாடுகின்றது. கட்ச் (குஜராத்) பகுதியில் உள்ள 'ரண்' தனக்குச் சொந்தம் என்று கூறிப் படைகளை கொண்டுவந்து குவித்துப் போருக்கு வித்திட்டு விட்டது.

போர் வேண்டுமா வேண்டாமா என்பது விவாதமாக இருக்கும் நிலை வேறு. ஆனால் தவிர்க்க இயலாத நிலையில் போர்ச்சூழ்நிலை உருவாகி இருக்கும் இந்த நேரத்தில் அனைவருடைய சிந்தனையும் செயலும் ஒருமுகப்படுத்தப்பட்டு நாட்டுநலனில் அக்கறை கொண்டதாக விளங்கவேண்டும். இந்தியா எப்போதும் அமைதி அமைதி என்று முழங்கி வருவதனால் அதற்குப் போரிடும் ஆற்றல் இல்லை என்று அயலவர் கருதி விட்டனர் போலும்! அமைதியை விரும்பும் மனத்தில் ஆற்றலும் செறிந்து இருக்கும் என்பதை இன்று நாம் உலகத்திற்கு உணர்த்தியுள்ளோம். பெருந்தொகையான மக்களைக் கொண்டிருப்பதே தனக்கு போதுமான ஆற்றல் என்று கருதிச் சீனர் நம் மண்ணின்மீது காலடி வைத்தபோது நாடே திரண்டு அவர்களை எதிர்த்தது. கட்சி வேறுபாடு இன்றி எல்லாரும் இணைந்து நின்றனர்; செல்வரும் வறியரும் சேர்ந்து நின்று ஒற்றுமையை நிலைநாட்டினர்; பள்ளிகளில் படிக்கும் சின்னஞ் சிறு குழந்தைகளும், நாட்டின் பாதுகாப்புக்குத் தங்களால் ஆனவகைகளில் உதவி செய்தனர்.

இந்த நினைவுகள் இன்னும் நெஞ்சத் திரையை விட்டு நீங்கவில்லை. இதற்குள், பாகிஸ்தான் பகை முற்றிப் படைஎடுத்து விட்டது. கிடைத்தவரை அகப்படுத்திக்கொள்ளலாம் என்பது அதன் கனவு போலும்! காரணம் ஏதும் இன்றி, பாகிஸ்தான் செய்துள்ள இந்த அக்கிரமச் செயலை இந்தியர் உணர்ந்துவிட்டனர்,

இந்தியப் பேரரசு, எப்படியும் பகையை முறியடிப்போம் என்று உறுதிபூண்டிருக்கிறது "போரை நிறுத்த வேண்டும்; இல்லையேல் பதில் நடவடிக்கை கட்டாயம் எடுப்போம்" என்று தலைமை யமைச்சர் திரு. லால் பகதூர் அவர்கள் அறிவித்திருக்கிறார். பாராளு மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய உணர்ச்சிகளை வெளிப்படுத்தி நாட்டுப் பாதுகாப்பில் தங்களுக்குள்ள அக்கறையைப் புலப்படுத்தியுள்ளனர். இதழ்கள் நிலைமைகளை மக்களுக்குக் கூறி, நாட்டின் நலனின் மக்கள் ஈடுபாடு கொள்ளச்செய்து வருகின்றன. நமக்குள் கருத்து வேறுபாடுகள், வேறு நேரங்களில், வேறு நிலைகளில் இருக்கலாம்; இருக்கின்றன. ஆனால் நாட்டின் பாதுகாப்பு என்ற பிரச்சினை முன்நிற்கும்போது நாம் ஒன்றுபட்டு நிற்கின்றோம். நாட்டின் எதிரியை எதிர்த்துப் போரிடுவது என்பதில் கருத்து வேறுபாட்டுக்கு இடம் இல்லை. நாம் அனைவரும் ஒன்றுபட்டு நின்று—திரண்டு நின்று—நமது மண்ணைக் காத்துக்கொள்வதற்கான முயற்சியில் ஈடுபட்டாக வேண்டும்.

இந்தியப் பேரரசு பகைவரை எதிர்ப்பதில் காட்டும் தீவிர உணர்ச்சியை, உறுதியை, நாம் போற்றுகின்றோம். இந்த உறுதி நமக்கு வெற்றியை ஈட்டித் தரும் என்று நம்புகின்றோம். நாம் சமாதானத்தைத்தான் விரும்புகின்றோம்; ஆனால் ஆக்ரமிப்பு செய்வோருக்குத் தக்க பதிலடி கொடுக்கக்கூடிய ஆற்றலும் நமக்கு இருக்கிறது என்பதை உலகத்திற்கு நாம் காட்ட வேண்டிய காலம் வந்துள்ளது.

நாட்டின் மானத்தைக் காக்கும் இந்த மாபெரும் பிரச்சினையில் ஆட்சியாளர்களுக்கு மட்டும்தான் பொறுப்பு இருக்கிறது என்றோ, அவர்களால் மட்டும்தான் அது இயலும் என்றோ தவறாக யாரும் எண்ணி விடக்கூடாது. எல்லாக் கட்சிகளும் நாட்டு நலனில் அக்கறை கொண்டவையே என்பதை எண்ணி, எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு அணியை அமைத்து. அதன் ஆலோசனைகளையும் பெற வேண்டும் என்று இந்த நேரத்தில் இந்திப் பேரரசினர்க்குக் கூறிக் கொள்ளுகின்றோம்.

> போர் நிறுத்தத்திற்கோ, சமாதானத்திற்கோ பேச்சு நடத்துவதாயின் பேச்சின் போது ஸ்ரீசாஸ்திரி தமதுபொறுபை "ஆளும் கட்சியின் பொறுப்பாக" மட்டும் வைத்துக் கொள்ளாமல், எதிர்க்கட்சிகளின் (பதவியில் இல்லாத கட்சிகளின்) தலைவர்களையும் கலந்துகொள்ளுவது நல்லது என்று நாம் வற்புறுத்தியதன் கருத்து இதுதான்......... போராயிருந்தாலும், போர் நிறுத்தமாயிருந்தாலும், எல்லோரும் சேர்ந்து ஒப்புக் கொண்டு செய்த முடிவு என்ற உணர்ச்சி ஏற்பட்டாக வேண்டும் என்று 'தினமணி' இதழும் இக்கருத்தினை வற்புறுத்தி வருகின்றது.

சோதனைகள் மிகுந்துள்ள இந்த நேரத்தில், நாட்டின் பாதுகாப்புக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் தன் முழு ஒத்துழைப்பையும் தந்து ஆதரிக்கிறது என்பதை உறுதி கூறுகின்றோம்.

என்றைக்குமில்லாத விதமாக அன்றைக்கு மிகக் கோபமாக இருந்தார், கலெக்டர்.

"என்ன மிஸ்டர் சுந்தரம், நீங்கள் தானே முப்பதாம் நம்பர் பிரயாணியைப் பரிசோதித்தவர்?"

"ஆமாம், சார்!"

"நன்ருக பரிசோதனை செய்தீர்களா?"

"மிகவும் நன்ருக..."

"என்ன செய்தீர்கள்......அவள் ஒரு கள்ளக்கடததல் பேர்வழி என்று உங்களுக்குத் தெரியுமா?"

"உண்மையாகவா.......என்னைப் பொறுத்தவரை, அவள் கொண்டு வந்த சாமான்களை நன்ருக பரிசோதித்துவிட்டேன். அவளை அந்தரங்க பரிசோதனைக்குக்கூட அனுப்பிவைத்தேன்!"

"நீங்கள் என்ன சொன்னுலும், நான் திருப்தியடைய முடியாது. இதோ அவளைப்பற்றி வந்த ரிப்போர்ட்டு. நீங்களே படித்துப் பாருங்கள். எனக்கு வேண்டியது வழக்கு-கடத்தப்பட்ட சாமான்கள். உங்கள் சமாதானமில்லை. என்று கூறிய வண்ணம் ஒரு ரிப்போர்ட்டை தூக்கி மேஜைமேல் போட்டார் கலெக்டர்.

அதற்குமேல் அவரிடம் பேசுவது வம்பை விலைக்கு வாங்குவது என்று எனக்கு நன்ருகத் தெரியும். ரிப்போர்ட்டை கையில் எடுத்துக் கொண்டு என் அறைக்கு புறப்பட்டேன்.

அலுவலகத்தின் வராண்டாவில் செல்லும்பொழுது அன்று காலையில் நடந்த சம்பவங்கள் ஒன்றன் பின் ஒன்ருக என் மனதில் வந்துகொண்டிருந்தன.

துறைமுகத்தில், கப்பலில் வந்திறங்கும் பிரயாணிகளைப் பரிசோதித்து உள்ளே அனுப்பும் வேலை இருக்கிறதே, அதில் இருக்கும் சிரமத்தை, அயல் நாடு சென்று வந்தவர்கள் நன்கு அறிவார்கள்.

நல்லவர்கள்—நேர்மையானவர்கள் பிரயாணிகளாய் வரும் வரை நமககு எந்தவித தொந்திரவும் இலலை.

அன்று காலை வந்தவள்மாதிரி, பார்வைக்கும், பேச்சிற்கும நல்லவளாக வந்து, ஏமாற்றுத் தொழிலுக்கு இலக்கணமானவளாக உள்ளுக்குள் இருந்தால் என் செய்வது?

தங்கம்.....ஆம் அவள் பெயர் தங்கம் என்றுதான் கூறிஞுள். அவள பாஸ்போர்ட்டை நன்ருக சோதித்தேன. மூன்று பெட்டிகள், ஒரு படுக்கை, ஒரு சாப்பாட்டுக் கூடை எல்லாம துப்பரவாகப் பரிசோதிக்கப்பட்டன, சந்தேகத்திற்கு இடமாக எந்த பொருளும் படவில்லை. அவள் வார்த்தை சுத்தம்தான் என்ன!

"சார்...ஒரு விஷயம் சொன்னுல் கோபித்துக் கொள்ளமாட்டீர்களே.,...நான் மலேயாவிலிருநத நாலு வருடங்களுக்கு பின் வருகிறேன் சார்......

நான் நர்ஸ் வேலைக்குப் படித்து முடிக்கும்போது சுகுமாரன் என்பவர் என்னை காதலித்தாா, சார். நான் இடைமறித்து, "தயவு செய்து இந்த "சார்" போடுவதை நிறுத்திவிட்டு, சேதியை சொல்லுஙகள்!" என்றேன்.

"அவர் அப்போது எம். பி. பி. எஸ். மூன்ருவது வருடம் படித்துக்கொண்டிருந்தார். அவருடைய காதலை எப்படி தடுப்பது என்று எனக்குத் தெரியவில்லை. காதலால் அவர் படிப்பு நிச்சயம் கெட்டுவிடும் என்று தெரிந்தது. ஆகவே உடனே மலேயாவிற்கு புறப்பட்டேன். என்கூட படித்த நர்சுகள் பதினைந்து பேர்களுக்கு மலேயாவில் இரட்டிப்பு சம்பளத்தில் வேலை, கொடுததார்கள்,

"என்மேல் உண்மையில் காதல் இருந்தால் முதலில் படிப்பை முடியுங்கள். டாக்டர் ஆன பிறகும் என் ஞாபகம் உங்களுக்கு இருந்தால் மலேயாவிற்கு கடிதம் எழுதுங்கள். நான் அதுவரை உங்களுக்காகக் காத்துக்கொண்டிருக்கிறேன்!" என்று கூறிவிட்டு மலேயா சென்றேன்."

இப்படி இவள் கூறி முடிப்பதற்கும், அவளுடைய பெட்டிக்குள் இருந்த பேழை ஒன்றை நான் எடுப்பதற்கும் சரியாக இருந்தது.

"உஸ்......" என்று என் கையைப் பிடித்து நிறுத்தினள். நானே திகைத்துவிட்டேன்.

"போன மாதம் அவரிடமிருந்து கடிதம் வந்தது சார்! அதில் என்ன எழுதி இருந்தது தெரியுமா? "நான் டாக்டராகிவிட்டேன் தங்கம்! நான் அங்கு வரட்டுமா, அல்லது நீ இங்கு வருகிருயா?" என்றுதான் சார்! உடனே புறப்பட்டுவிட்டேன். இதே இந்த பேழையுள் இருக்கும் தங்க செயின் அவருக்காக நான் கொண்டு வரும் பரிசு, சார்! இதை எப்படியும் எடுத்துச் செல்ல அனுமதியுங்கள் சார்!" என்ருள்.

இப்படி ஒரு பெண் தன் காதல் விஷயங்களை வெளிப்படையாக சாதாரண நேரங்களில் கூறமாட்டார்கள். ஆனுல் துறைமுகத்திலே சுங்க அதிகாரிகள் முன்னிலையில் சர்வசாதாரணமாக கேட்கலாம். தாங்கள் கொண்டுவந்த சாமான்களை தங்குதடையின்றி நாட்டிற்குள் எடுத்துச்செல்ல வேண்டுமே என்ற ஆசையில் தங்கள் குடும்பநிலை அவ்வளவையும் எடுத்து சொல்ல ஆரம்பிப்பார்கள் பிரயாணிகள். சுங்க அதிகாரியின் மனதை இளகவைப்பது அவர்களுக்கு பலவிதத்திலும் லாபத்தை தரும்.

ஆனுல் அன்று காலையில் வந்த தங்கம் நான் பார்த்த ஆயிரக்கணக்கான பிரயாணிகளிலும் வேருனவள். அவளுடைய பேச்சில் ஒரு குழைவு. நடத்தையில் ஒரு மென்மை. கேரள மக்களுக்குள்ள தனியான சுத்தம். மினுமினுப்பான உடல். வெண்மையான பற்கள். சுருண்டு அலட்சியமாக விடப்பட்டிருந்த கேசம். வெள்ளை ஆடை. அதில் அழகை அள்ளித் தெளித்ததுபோல இடை இடையே அவளுடைய ரோஜாப்பூ மலர் மேனி. அவளுடைய உருவத்தையும், அவள் பேசிய பேச்சையும் நினைக்கும்போது என்னுல் என்கையில் இருக்கும்ரிப்போர்ட்டை நம்பமுடியவில்லை.

"என் திருமணம் இன்னும் ஒரு வாரத்திற்குள் இருக்கும் சார்! இந்த ஸ்டெதாஸ் கோப், இந்தடிரான்ஸ்ஸிஸ்டர் செட், இந்த வாசனை திரவியங்கள், இந்த ரப்பர் செருப்புகள் இந்த டெர்லின் சட்டைகள்; டெக்ரான் சனல் சட்டைகள் எல்லாம் அவருக்குத்தான்! தயவுசெய்து இவைகளை எல்லாம் அனுமதியுங்கள்!" என்று அவள் கேட்டபோது அதில் எந்தவிதமான பொய்க் கலப்பும் இருப்பதாக யாரும் நினைக்கமாட்டார்கள். என்னைப் பொறுத்தவரை நான் பரிபூரணமாக நம்பினேன். இன்னும் தெளிவாக சொல்லப்போனுல் அவள் கொண்டுவந்த சாமான்களை பரிசோதனை செய்த அந்த ஒரு மணி நேரமும் அவள் பேச்சில், அழகில் மயங்கி இருந்தேன்.

அவளும் என்னிடம் அளவிற் கதிகமாகவே பழகினள் என்றுதான் சொல்லவேண்டும்.

எப்படியோ கெட்டிக்காரி, என்னை ஏமாற்றிவிட்டு சென்றுவிட்டாள்!

என் அறையில் உட்கார்ந்துகொண்டு கலெக்டர் கொடுத்த ரிப்போர்ட்டைப் படித்துப் பார்த்தேன்.

அந்த அறிக்கையின்படி பார்த்தால் வீராசாமி என்ற பெரிய கள்ளக் கடத்தல் ஆசாமியின் கையாள் தான் தங்கம் என்பவளும் என்று எழுதப்பட்டிருந்தது. அன்று காலையில் வீராசாமியும் கப்பலில் வந்திருக்கிருன். அவனுடைய சாமான்களை ஒரு தடவைக்குப் பல தடவைகள் சோதித்து, அவனையும் பல மணி நேரங்கள் பரிசோதித்தப் பின்தான் அனுப்பி இருக்கின்றனர். அவனிடம் ஒன்றும் சிக்காமல் போகவே, கள்ளக் கடத்தல் வேறு பிரயாணி மூல்யமாக நடந்திருக்கிறது என்று ஆராய்ந்து அறிந்து, அது தங்கம் மூல்யமாக என்ற முடிவுக்கு வந்திருந்திருக்கின்றனர். தங்கத்தைப் பற்றி எனக்கு எச்சரிக்கும் முன், நான் அவளை பரிசோதித்து அனுப்பிவிட்டேன். இதில் கலெக்டர் கோபப்பட்டு, நான் செய்யக்கூடியது என்ன? இந்தக் கள்ளக் கடத்தல் விஷயத்திலே மாத்திரம், ஆளை விட்டுவிட்டால் அடுத்த விநுடி எல்லாம் ஏமாற்றம்தான்!

அவனுடைய 'பாஸ்போர்ட்'டில் போத்தனூர் விலாசம் கொடுத்திருந்த காரணத்தினுல், ஒருவேளை இன்றிரவு நீலகிரி எக்ஸ்பிரசில் அவள் போகலாம் என்று லேசான சந்தேகத்துடன், அன்றிரவு சென்ட்ரல் ஸடேஷனுக்குச் சென்றேன். ஒவ்வொரு பெட்டியாக ரயிலில் கடைசிவரைப் பார்த்தேன். தங்கம் போன்ற பெண்கள் பலரைப் பார்த்தேனே தவிர, என்னிடமிருந்த தப்பிப்போன "தங்கத்"தைக் காணவில்லை. எதிர்பார்த்த ஏமாற்றம் என்ருலும் என்னுடைய திறமையின்மையை எண்ணி நொந்துபோன மனதுடன் பிளாட்பாரத்தில் வந்துகொண்டிருந்தேன். ரெயில் புறப்பட முதல் மணியும் அடித்தாகிவிட்டது. நாடகத்தில் நடப்பதுபோல் அந்த நிமிஷத்தில் முன்னுல் ஒரு சூட்போட்ட பெரிய மனிதர் ஒருவர் நடந்துவர, அவர் பின்னே அவள் நடந்துவந்தாள். ஆம் என்னிடம் தப்பிப்போன தங்கம்தான்! அவர்கள் போக வழிவிட்டு, அவர்கள் கண்ணில் படாமல் வேறு பக்கத்தில் மறைந்துகொண்டேன் அவர்கள் வேகமாக சென்று முதல் வகுப்பு வண்டியொன்றில் ஏறிக்கொண்டனர். ரயில் புறப்பட்டது. மறுபடியும் என்னருகில் வந்து தப்பிவிட்டாள் அவள்! ஆனுல் ஓடும் ரயிலில் அவள் செல்கிருள். அது சிறையில் இருப்பது போல்தானே! உடனே வெளியே போய் முதல் வகுப்பு பிரயாணிகள் பெயர்ப் பட்டியலை பார்த்தேன். அதில் தங்கத்தின் பெயரைக் காணவில்லை. 'திரு. அழகமுத்து தம்பதிகள்' என்று இரண்டு இடங்கள் ஒதுக்கப்பட்டிருந்தன. ஒன்றும் தெளிவாகாத சூழ்நிலையில் கலெக்டருக்கு டெலிபோன் செய்தேன்.

சேதியைக் கேட்ட கலெக்டர், "ஒரு காரும், நான்கு ஆபிசர்களும் அனுப்புகிறேன். அரக்கோணத்தில் அவளை சந்தித்துப் பார்!'; என்ருர். நாம் ஆவலோடு வேலை செய்தால், தட்டிக் கொடுத்து உதவி செய்வதில் இவரைப்போல யாரும் கிடையாது.

பத்து நிமிஷத்திற்குள் சென்ட்ரல் ஸ்டேஷனிலிருந்து அரக்கோணத்தை நோக்கி எங்கள் ஆபீஸ் காரில் நான்கு சக அதிகாரிகளோடு புறப்பட்டேன்.

அரக்கோணத்திலேயே அவளுடைய படுக்கை, பெட்டிகளை மறுபடியும் பரிசோதனை செய்வதா,

அல்லது அவளை இறக்கி மறுபடியும் சென்னைக்கே அழைத்து வருவதா இப்படி பல பிரச்சினைகள் எங்களுக்குள் ரயில் அரக்கோணம் வருவதற்கு அரை மணி முன்பே நாங்கள் ஸ்டேஷனுக்குச் சென்றுவிட்டோம்.

நான் மாத்திரம் முதலில் போய் அவளை விசாரிப்பது என்றும் தேவைப்பட்டால் அவளுடன் ரயிலிலேயே காட்பாடிவரை செல்வது என்றும், மற்றவர்கள் என்னை காரில் பின் தொடர்வது என்றும் முடிவு செய்து கொண்டோம்.

ரயில் அரக்கோணம் வந்தது. அவள் வந்த பெட்டியைத் தேடி ஏறினேன். உள்ளே நுழைந்தவுடன் அவள் என்னைப் பார்த்தாள். அவள் தங்கமேதான். சந்தேகமேயில்லை. இழந்த உயிர் எனக்குத் திரும்ப வந்தது.

"ஹல்லோ...!" என்றேன் அவளைப் பார்த்து. சட்டென்று தன் தலையைக் குனிந்துகொண்டாள் அவள். அவளருகில் அமர்ந்திருந்த சூட்டும் கோட்டுமாக இருந்த கனவான் சட்டென்று எழுந்து என்னைப் பார்த்து,

"யாரது......என்ன வேண்டும்?" என்றார்.

இந்தக் கேள்வி கேட்டவுடனேயே எனக்கு தூக்கி வாரிப் போட்டது.

"நான் ஒரு கஸ்டம்ஸ் ஆபீசர். அவர்கள்தானே மிஸ் தங்கம்?" என்றேன்.

"ஆள் மாருட்டமா...! சார் இவள் என் மனைவி ராஜம். நான் கோயம்புத்தூரைச் சேர்ந்த செந்தில் ஆறுமுகம். மில் முதலாளி!" என்றார் அந்த ஆசாமி.

எனக்கு என்ன பதில் சொல்வது என்றே தெரியவில்லை.

மன்னிக்கவேண்டும்...! என்று கூறிக்கொண்டே அப்படியே அமர்ந்துவிட்டேன். எனக்கேற்பட்ட அதிர்ச்சியிலிருந்த நான் விடுபடும் முன்பே ரயில் புறப்பட்டு விட்டது. சிறிதுநேரம் சும்மாவே உட்கார்ந்திருந்தேன். அடுத்தபடி என்ன செய்வது என்று என் மூளையில்



ஆயிரம் குழப்பங்கள் அவளை மறுபடியும் பார்த்தேன். குனிந்த தலை நிமிராமல் அமர்ந்திருந்தாள். இருந்த போதிலும் தங்கம்தான் அவள் என்று நிச்சயமாக எனக்குத் தோன்றியது. அல்லது அவள் ராஜமாக இருந்தால், தோற்றத்தில் வேற்றுமையே இல்லாத இரு பெண்களை நான் பார்ப்பது இதுவே முதல்தடவை.

நான் திகைத்து அமர்ந்திருப்பதைப் பார்த்த அந்த கனவான் "என்ன சார், என்ன நடந்தது......நான் கேட்கலாமா?" என்ருர்.

நான் அசடு வழியும் முகத்தோடு "ஒன்றுமில்லை... காலையில் கப்பலில தங்கம் என்ற அம்மையார் ஒருவர் வந்தார்கள். அவர்கள் தங்கள் மனைவியைப் போலிருப் பார்கள். அவர்களிடம் ஒரு பாரத்தில் கையெழுத்து வாங்க மறந்துவிட்டேன். அதை வாங்கிப் போக நினைத்தே வந்தேன்..." என்று ஏதோ உளறினேன்.

அவர் அதோடு விடுவதாயில்லை. "அப்படி முக்கிய மான பாரமா அது?" என்ருர்.

"ஆமாம் சார்! சாதாரணமாக அது பெரியகுற்றம். அதுவும் இந்த நபரைப் பொறுத்தவரை எனவேலைக்கே ஆபதது வந்துவிடும் போலிருக்கிறது......!' என்று கூறிக்கொண்டே அவளைப் பார்ததேன்.

அதுவரைக் குனிந்த தலை நிமிராமல் இருந்தவள், நான் கூறியதைக் கேட்டவுடன் டககென்று தலையைத் தூக்கி என்னைப் பார்த்தாள். மறு விளுடியே தன் கணவர் தன்னை பார்ப்பது தெரிந்தவுடன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டாள்.

"மிகவும் வருந்தத்தக்க விஷயம். அந்தப் பெண் ணுக என் மனைவி இருக்கக்கூடாதா.........அப்படி யாளுல் இப்பொழுதே கையெழுத்துப் போட்டுக் கொடுக்கச் சொல்லிவிடுவேன்!" என்ருர் சிரித்துக் கொண்டே.

எனக்கு அதற்குமேல் பேச நா எழவில்லை. டாக் டரை திருமணம் செய்துகொள்ளப் போகிறேன் என்று சொன்ன தங்கம் உண்மையானவளா?

கள்ளக் கடத்தல் வீராசாமியின் உளவாளியாக பலப் பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் பொறுமான வைரத்தை என்னை ஏமாற்றி எடுத்துச் சென்ற ரிப்போட்டில் குறிப்பிடப்பட்டிருந்த தங்கம் உண்மை யானவளா?

அல்லது இதோ என் முன் பெரியதனக்காரனின் மனைவியாக அமர்ந்திருக்கும் ராஜம், தங்கமா?

எது மெய், எது பொய் என்று அறியாமல் எல்லாம் மாயை என்று கூறும் மதவாதிபோல் நானும் திகைத்துப்போய் அமர்ந்திருந்தேன். ரயில் காட்பாடி வந்து சேர்ந்தது.

நண்பர்கள் எனக்கு முன்பே காரில் காட்பாடி வந்து ரயில் நிலையத்தில் காத்துக் கொண்டிருந்தனர். ஏற்பட்ட ஏமாற்றத்தை அவர்களிடம் விளக்கினேன். எங்களுக்குள் ஒரே சர்ச்சை. ஒருவர், நல்லதோ கெட்டதோ உடனே அந்த இரண்டு பேரையும் பரி சோதனை செய்து பார்த்துவிடலாம் என்ருர். மற்ருெரு வர், "அவர்கள் முதல்வகுப்புப் பிரயாணிகள். உண்மை யிலேயே அவன் மில் முதலாளியும் அவள் அவன் மனைவியுமாக இருந்துவிட்டால் நாளைக்கு கலெக்ட ருக்கு புகார் செய்து நமக்கு முட்டாள் பட்டம் கிடைக் கும்படி செயதுவிடுவான்!" என்ருர். இப்படி ஒருவருக் கொருவர் பேசிக்கொண்டிருந்தனர்.

எப்படியும் எனக்கு ஒரு சந்தேகம் மாத்திரம் தெளிவாகவில்லை. வைரத்தைக் கடத்திய வீராசாமி இப்பொழுது கூடவே அந்த பெண்ணையும் இழுத்துச் செல்வானேன்? உண்மையில் இவள் தங்கமாக இருந் தால், துறைமுகத்தை விட்டு வெளியே வந்தவுட னேயே அவளிடமிருந்த வைரங்களை வேறு ஆள் வாங்கி போயிருப்பான். அவளிடம் இன்னும் அந்த மூட்டைகள் இருக்க நியாயமில்லை. ஆகவே இப் பொழுது பரிசோதனை செய்வது அவசியமில்லை என்றே பட்டது.

எதற்கும் கோயம்புத்தூரில் அவர்களை கண் காணிக்குமாறு கோவை அதிகாரிக்கு ஒரு தந்தியைக் கொடுத்துவிட்டு திரும்ப சென்னைக்குப் புறப்பட்டேன்.

காலையில் கலெக்டர் அறையில் நுழைந்தேன். நான் பேசுவதற்கு முன்னமேயே அவர் ஆரம்பித்து விட்டார்.

அவள்தான் தங்கம்! என்னுடைய இரகசிய தக வல் சேகரிக்கும் ஆசாமி நேற்றிரவே வந்து கூறிவிட் டான். அவள்கூட போகுபவன் கள்ளக்கடத்தல் வீரா சாமியின் கையாள் முனியப்பா, அவளைப் பார்த்தும், ஏமாந்து திரும்பி வந்திருக்கும் உனக்கு நான் என்ன தண்டனை தருவது?" என்ருர்.

நான்தோல்வியை ஒத்துக்கொள்ளத் தயாராயில்லை. என்னுடைய எண்ணத்தையும், கோவைக்கு தந்தி கொடுத்திருப்பதையும் கூறினேன்.

"என்னமோ, தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக் கிறீர்கள்!" என்று அலுத்துக்கொண்டார் அவர்.

பதில் பேசாமல், என் அறைக்கு வந்துவிட்டேன். தங்கம் விஷயத்தில் என் தோல்வியை ஒத்துக்கொள் வதைத் தவிர வேறென்ன செய்வது?

இரண்டு நாட்கள் ஓடியது. தங்கத்தையும் அவளால் ஏற்பட்ட ஏமாற்றத்தையும் மறக்க முயன் றேன்; முடியவில்லை.

இனிமேல் யாராயிருந்தாலும் கொஞ்சம்கூட இரக்கமின்றி பரிசோதனை செய்து மிகவும் பத்திரமாக நடந்துகொள்ள வேண்டுமென்று எண்ணிக்கொண் டிருந்தேன்.

"சார்! இந்த கடிதம் உங்களுக்கு உரியதா என்று பார்க்கச் சொன்ஞர்,—கலெக்டர்!" என்று கூறிக் கொண்டே ஒரு கடிதத்தை என் மேஜைமேல் வைத் தான், அலுவலகப் பணியாள்.

கோவை என்று அஞ்சல் முத்திரையிடப்பெற்ற கவர் அது. 'சுந்தரம், கஸ்டம்ஸ் ஆபீசர். துறைமுகம்' என்று புது விதமான முகவரி அதன்மேல் குறிப்பிடப் பட்டிருந்தது. ஒன்றும் புரியாத புதிராக இருந்த அந்தக் கடிதம் என்னுடைய வாழ்க்கையில் எதிர்பாராத ஆச் சரியத்தை ஏற்படுத்தியது.

"தாங்கள் குறிப்பிட்டிருந்த பாரத்தில் கை யெழுத்து போட்டுக்கொடுக்கிறேன். என்ஞல் தங்கள் வேலைக்கு ஆபத்து வரும் என்று கேட்டதும் எனக்கு

மிக வருத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. நாளைக்கே கோவைக்கு வந்து 'லட்சுமி விலாஸ் ஹோட்டலில்' தங்கியிருங்கள். நானே வந்து அதில் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறேன்!''

என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

அப்படியானுல் ராஜம்தான் தங்கம்! தங்கம்தான் ராஜம்!!

அப்பப்பா, இந்த பெண்களை நம்பவே கூடாது. என்ன பரிவாக பேசினுள், எவ்வளவு உரிமையோடு பழகினுள், அவ்வளவும் விஷம்!

ஆமாம். அப்பேற்பட்டவள் இந்த கடிதம் எழுத வேண்டிய அவசியம். சட்டத்தையே துச்சமாக மதிக்கும் கள்ளக் கடத்தல் கூட்டத்தைச் சேர்ந்தவள் என் வேலைக்கு ஆபத்து என்றவுடன் அக்கரையோடு கடிதம் எழுதுவானேன்? இதில் இருக்கும் சூது என்ன?

ஒரே குழப்பமான நிலையில் கலெக்டரிடம் சென்றேன். "நீ இன்றிரவு கோவை செல். நான் டிரங்க் செய்து கோவை அதிகாரிகளை கண்காணிக்க சொல்கிறேன!'' என்ருர்.

மறுநாள் காலையில் கோவை லட்சுமி விலாஸ் ஹோட்டலில பத்தாம் நெம்பர் அறையில் போய் அமர்ந்தேன்.

நான் ரெயிலில் இருந்து இறங்கி ஹோட்டலில் வந்து தங்கும்வரை தெரிந்த முகம எதையுமே பார்க்கவில்லை. நான் யார் என்பதை யாரும் புரிந்து கொள்ளா வண்ணம் நடந்து கொண்டேன.

சுமார் பதது மணி இருக்கும். டெலிபோன் மணி அடித்தது.

"ஹல்லோ........"

"..................''

"ஆம் சுந்தரம்......!''

நாங்கள் கொடுத்த தகவலை வைத்துக்கொண்டு மேற்கொண்டு இரகசிய விசாரணைகள் செய்து கள்ளக் கடத்தல் வீராசாமியை கையும் களவுமாகப் பிடித்து விட்டதாக கோவை அதிகாரி செய்த போன் அது. போனை வைத்துவிட்டு அவர் குறிப்பிட்ட முகவரிக்கு விரைந்தேன்.

அந்த பங்களாவின் முன் ஹாலிலேயே வீராசாமி அவன் அந்தரங்க காரியதரிசி முனியப்பா இருவரும் போலீஸ் பாதுகாவலோடு அமர்த்தப்பட்டிருந்தனர். எதிரில் மில் முதலாளி ஒருவர்போல் மாறுவேடம்பூண்டு அமர்ந்திருந்தார் எஙகள் இலாகாவின் கோவைமாவட்ட அதிகாரி ராமப்பிரம்மம். இவர்களுக்கு வலதுகோடியில் நின்றுகொண்டிருந்தாள், தங்கம்......

நான் உள்ளே நுழைந்தவுடன் ராமப்பிரம்மம் எழுந்து என்னை வரவேற்ருர்.

"தங்கள் தகவலுக்கு மிகவும் நன்றி! மில் முதலாளிபோல் மாறுவேடம்போட்டு ரூபாய். நாற்பதாயிரம் பொறுமான வைரத்தைக் கைப்பற்றினேன். இதோ இந்த பேழையை இதற்குமுன் பார்த்திருக்கிறீர்களா?'' என்று ஒரு சிறிய பெட்டியை எடுத்தார் ராமப்பிரம்மம்.

ஆம், அதே பெட்டிதான்! தன்னைத் திருமணம் செய்துக்கொள்ளப்போகும் டாக்டருக்கு அன்பளிப்பாக கொடுக்கப் போவதாகக் கூறிய தங்க சங்கிலி இருந்த அதே பெட்டிதான்! அந்த பெட்டியின் உள்ளே வெல்வெட் ஒட்டி இருக்கும். அதன்மேல் தங்க சங்கிலி பொருந்தி இருக்கும். ஆனுல் அந்த வெல்வெட்டை கொஞ்சம் அழுத்தித் தூக்கினுல் அடியில் ஓர் அறை! அந்த சிறிய பேழைக்கு இரண்டு அடி பாகங்கள். முதல் அடிபாகத்திற்கும் இரண்டாவது அடிப்பாகத்திற்கும் இடையில் ஒரே வைரக் குவியல்!

சில வினுடிகள் என் கண்களே பூத்துப்போயின. அப்படியே அவள் நின்றபக்கம் திரும்பினேன். அவளால் ஏமாற்றப்பட்டோம் என்பதைவிட, அவள் இவ்வளவு பெரிய சூதுக்காரி என்று அறிய எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

"எல்லோரும் காரில் ஏறுங்கள் — அலுவலகம் செல்லலாம்!'' என்ருர் ராமப்பிரம்மம்.

அலுவலகத்தில் ஒவ்வொருவரையும் தனியாக விசாரித்துக்கொண்டிருந்தோம்.

தங்கத்தை தனியாக விசாரிக்கும்போது நான் மௌனமாக அமர்ந்திருந்தேன். அவளாகவே கள்ளக் கடத்தலுக்கு தான் உடந்தையாக இருந்ததாக ஒத்துக் கொண்டாள்.

விசாரணைகள் முடிந்தவுடன் அவளைத் தனியாக சந்தித்தேன்

"ஏதோ பாரத்தில் கையெழுத்துபோட விட்டுப் போய்விட்டதாகக் கூறினீர்களே...!'' என்று என்னைப் பார்த்தாள்.

அவளுடைய பார்வையில் இருந்த பரிவு. இவள் எப்படி கெட்டவளாக இருக்கமுடியும் என்றே எனக்குப்பட்டது.

"இந்த விஷயத்தில்மாத்திரம் ஏன் இவ்வளவு அக்கரையோடு இருக்கிருய்?'' என்றேன்.

"அதில் கையெழுத்துபோடவில்லையானுல் தங்கள் வேலைக்கே ஆபத்து வந்துவிடும், என்றீர்களே!'' என்ருள்.

விற்பனையாளர்களுக்கு

மணியாடர், செக், டிராப்ட், கடிதங்கள் அனுப்பும்போது உரிமையாளர் "காஞ்சி'' அலுவலகம் சின்ன காஞ்சிபுரம் என்று குறிப்பிட்டு எழுதவும்.

உரிமையாளர்
"காஞ்சி''
சின்ன காஞ்சிபுரம்.

"இருக்கலாம்...அதற்கு நீ ஏன் இவ்வளவு கவலைப் படுகிறாய்..." என்று இயற்கையாக என் மனதில் தோன்றியதைக் கேட்டுவிட்டேன்.

உடனே அவள் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைப் பார்க்கவேண்டுமே! கண்களிலிருந்து நீர் தாரைதாரையாக வழிந்தது.

"நான் செய்த குற்றம் காரணமாக, எனக்கு மனித உள்ளமே இல்லை என்று எண்ணிவிட்டீர்களா?" என்றாள் அழுதுகொண்டே.

அதற்குமேல் அவளை அதிகாரமிரட்டல் செய்வதில் அர்த்தமில்லை. அவளை சில நிமிஷங்கள் நிதானமாக விட்டேன். பிறகு, "உன்னை ஒருவிதத்திலும் தவறாக நினைத்துக்கொள்ளவில்லை. நான் கேட்டது குறித்து என்மேல் கோபப்படவேண்டாம்..." என்று சமாதானம் பேசினேன்.

"ஆனால் ஒன்று கேட்கிறேன் கோபித்துக்கொள்ள மாட்டாயே......அன்று துறைமுகத்திலே நீ சொல்லியவைகளில் எது உண்மை—எது பொய். நீ எப்படி இந்த கள்ளக்கடத்தல்வேலையில் சிக்கிக்கொண்டாய்?" என்றேன்.

அவள் என்னைப் பார்த்த பார்வை மிகக் கோபமாக ஏதோ பதில் சொல்வாளோ என்று எண்ண வேண்டியிருந்தது.

"இவ்வளவு தூரம் ஆன பிறகு உங்களிடம் கூறினால்தான் என்ன?

நான் கூறியது அவ்வளவும் உண்மைதான். ஆனால் கடைசிப் பகுதியைத் தவிர.

என்னைக் காதலித்தவர் டாக்டருக்குப் படித்துக் கொண்டிருந்தவர்தான். நான் கூறியபடி அவர் எம். பி. பி. எஸ். படித்து முழு டாக்டரான பின் திருமணம் செய்துகொள்வதாக வாக்களித்துவிட்டுதான் மலேயா சென்றேன். ஆனால் நான் கூறியபடி அவர் டாக்டராகவில்லை. நான் போன பிறகு அவர் படிப்பில் கவனம் செலுத்துவதற்கு பதில் பரத்தையர் விடுதிகளில் கவனம் செலுத்தியிருக்கிறார்!

டாக்டராகாதது மாத்திரமில்லை, சார்! தன் உடல், மானம், சொத்து, சுகம், எல்லாவற்றையும் கெடுத்துக் கொண்டிருக்கிறார்.

"பத்தாயிரத்திற்குமேல் கடன்பட்டிருக்கிறார் என்றும், உடல்நலக் குறைவால் ஆஸ்பத்திரியில் படுத்திருக்கிறார் என்றும் என் தோழி ஒருத்தி மலேயாவிற்கு கடிதம் எழுதி இருந்தாள்!

என் நிலைமையை நீங்கள் கிக்க யூமுடியும் என்று எண்ணுகிறேன்.

என்னால் ஒரு ஜீவன் கெட்டுப் போய்விட்டது என்றே எனக்குத் தோன்றியது.

நான் காதலித்து, இன்பத்தின் சுவையை அவருக்குக் காண்பிக்காமலிருந்தால் ஒருசமயம் அவர் ஒழுங்காக டாக்டராகிக்கூட இருந்திருக்கலாம்.

பிற்கால நல்வாழ்வை எண்ணி அவரை தனியே விட்டு நான் மலேயா சென்றேன். அது எங்கள் பிந்திய வாழ்வையே அழித்துவிட்டது! அடிக்கல் உடைந்த கட்டிடமாகியது என் வாழ்க்கை!!

என்னால் ஒருவருக்கு ஆபத்து என்றால் எனக்கு என்றைக்குமே பொறுக்க முடியாது. தங்களுக்கு என்னால் வேலைக்கு ஆபத்து என்றதும், அதனால்தான் அவசரம், அவசரமாக கடிதம் எழுதினேன்...!

அவருக்கு என்ன உதவி செய்வது என்று யோசனை செய்துகொண்டே பினாங்கில் உள்ள ஆஸ்பத்திரியில் உலவிக்கொண்டிருந்தேன்.

அங்கே இந்த வீராசாமி ஒரு நோயாளியாக இருந்து வந்தார். அவர் நல்ல பணக்காரர் என்றுதான் நாங்கள் நினைத்து வந்தோமே தவிர, ஒரு கள்ளக் கடத்தல் ஆசாமி என்று அப்பொழுது தெரியாது. என்கூட வேலை செய்யும் மற்றொரு நர்ஸ் என்னிடம் வேடிக்கையாக, "என்னடி தங்கம், ஏதேதோ யோசனை செய்து கொண்டிருக்கிறாயே......இதோ இருக்கிறாரே வீராசாமி. உன் நோயாளிதானே அவர். அவரைக் கேள்......

வாய்வு சூரணம்
(Stomach Powder)

மலச்சிக்கல் — மலக்கட்டு — உஷ்ண வாய்வு — பித்தவாய்வு—இடுப்பு வாய்வு-இடுப்பு கைகால் பிடிப்பு-அசரிக்கை-செரியாமை-வயிற்றுவலி முதலான வாய்வுகளை நீக்கி நல்ல பசி எடுப்பதற்கும் திரேகாரோக்கியத்திற்கும் மிகச் சிறந்தது. (பத்தியமில்லை)

175 கிராம் (5 பலம்) டின் ரூ. 3-50

தேவைக்கு எழுதவும்:

S. V. R. கண்டர் சன்ஸ்,
வாய்வு சூரணம் டிப்போ,
தம்மண்ண செட்டியார் ரோடு, அரிசிப்பாளையம், சேலம்-9.

சென்னை நகரில் நேரில்பெற ஸ்டாக்கிஸ்டு:

தேஜ்பால் & கோ.,
91, நைனியப்ப நாய்க்கன் தெரு, சென்னை-3.

பம்பாயில் கிடைக்குமிடம்:

E. வல்லாராம் நாடார் & சன்ஸ்,
188, தாராவி ரோடு, பம்பாய்-17.

பெங்களூரில் கிடைக்குமிடம்:

தேஜ்பால் & கோ.
72, அப்புராவ் சந்து, நாகர்நாபேட்—கிராஸ்
பெங்களூர் சிட்டி-2.

அவர் லட்சப் பணக்காரர். எவ்வளவு வேண்டுமானுலும் தருவார்!'' என்ருள்.

இதைக் கேட்ட வீராசாமி "என்ன வேணும் நர்சம்மா...!'; என்ருர்.

மிகவும் கஷ்டப்பட்டு என் நிலேமையை விளக்கினேன். "அதனுல் பரவாயில்லே. நீ என் கூடவே அடுத்த கப்பலில் தமிழ்நாட்டிற்கு வாம்மா.....உனக்கு வேண்டியதை செய்கிறேன்!'' என்ருர்.

மறுநாளே எங்கள் இருவருக்கும் கப்பலில் டிக்கட் புக்செய்தார் வீராசாமி. தாய் நாட்டிற்குத் திரும்புகிருேமே என்று என்னிடமிருந்த பணத்தையெல்லாம் போட்டு அவருக்குத் துணிமணிகள் வாங்கிக்கொண்டேன். அடுத்தக் கப்பலில் தமிழ் நாட்டிற்குப் பயணமாளுேம்.

கப்பல் சென்னேத் துறைமுகத்தை அடைந்த இரவு, வீராசாமி என் அறைக்கு வந்தார் அவர் கையிலிருந்த பேழையை என்னிடம் கொடுத்தார். ஆம்... தாங்கள் பரிசோதித்த அதே பேழைதான்! அதைக் கொடுத்துவிட்டு; "அம்மா, தங்கம்! இந்தப் பேழையில் இருக்கும்: தங்கச் சங்கிலியை என் ஞாபகார்த்தமாக வைத்துக்கொள், சென்ணேயில் இறங்கியபின் எனக்கு சில வேலேகளிருக்கின்றன. நீ மாத்திரம் என் காரிய தரிசியுடன் கோவை செல். அங்கு இந்த பேழையை மாத்திரம் எங்கள் மில் கணக்கப்பிள்ளேயிடம் கொடுத்தால் ரூ. 10,000/- கொடுப்பார். அதை வாங்கிக்கொள். முடிந்தால் அதற்கு முன்பே நான்வந்து சந்திக்கிறேன்! ஆனுல் இந்த பெட்டியை மிக பத்திரமாக வைத்துக் கொள். ஒருவேளே நான் உன்னே சந்திக்க முடியாமல் போய்விட்டால்கூட இந்தப் பெட்டியைக் கொடுக்கிறவருக்கு ரூ. 10,000/- கொடுக்கும்படி இன்றே என் கணக்கப்பிள்ளேக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன்! என்ருர்.''

இதைக் கேட்டவுடன் எனக்கேற்பட்ட ஆச்சரியத்திற்கு அளவே இல்லே.

"அப்படியானுல் அந்த பேழையில் வைரமிருந்தது உனக்குத் தெரியாதா?'' என்றேன்.

"......எனக்குத் தெரிந்திருந்தால் இந்த ஈன வேலேக்கு எப்படி நான் உடன்பட்டிருப்பேன்? திருமணம் செய்துகொள்ளப் போகிறவர்களுக்கு கொஞ்சம் தாராளமாக நகைகளே அனுமதிப்பார்கள் என்று கப்பலில் பிரயாணிகள் பேசிக் கொண்டதால்தான். இந்தப் பொய்யைக்கூட உங்களிடம் கூறினேன். எப்படியும் அந்தப் பேழைதான் என் உயிராக இருந்தது இந்த நாட்டின் மண்ணில் நான் இறங்கியபோது. இப்பொழுது அதுவே என் எமனுக முடிந்துவிட்டது!

அன்று நீங்கள் ரயிலில் என்னே சந்தித்துப் போன பிறகுதான் எப்பேற்பட்ட காரியத்திற்கு நான்உடந்தையாக்கப்பட்டிருக்கிறேன் என்று உணர்ந்தேன். இருந்தாலும், காதலனுக்கு புது வாழ்வு அளிக்கக் கிடைத்த வழி என்று எண்ணிக்கொண்டேன், இன்று எல்லோரும் பிடிபட்டுவிட்டோம்! என் திட்டங்கள் வீணுகிய தோடில்லாமல், கெட்ட பெயர் வேறு!'' என்ருள்,

அவளுடைய சோக வரலாறு ஒரு பெருங் கதைக்கு வேண்டிய சம்பவங்களேக் கொண்டதாக இருந்தது. ஒருவிதத்தில் நான் நினேத்தது உண்மைதான். அவள் நேர்மையானவள்தான். சந்தர்ப்பம்தான் சதி செய்துவிட்டது!

"இந்த வழக்கில் என் பகுதி என்ன? இதனுல் எனக்கு என்ன தண்டனே தருவார்கள் சார்!'' என்ருள்.

"கள்ளக் கடத்தலுக்கு உடந்தையாக இருந்தீர்கள் என்பதுதான். தண்டனே, நீதி வழங்கும் நீதிபதியைப் பொறுத்திருக்கிறது!'' என்றேன்.

"எதுவாக இருந்தாலும், யாரிடமும் உதவி கேட்கப் போவதில்லே நான். வந்தது வரட்டும் அனுபவிக்கிறேன்!'' என்று மிக வெறுப்போடு பேசினுள்.

நான் என்ன பதில் கூறுவது என்று தெரியாமல் திகைத்துப் போய் அமர்ந்திருந்தேன். அவளுடைய கண்களிலிருந்து நீர்த் திவலேகள் விழுந்துகொண்டிருந்தன.

டிரைவர்வந்து 'கார் ரெடி, சார்'' என்ருன்.

அவள் எழுந்து சென்ருள்.

ஜன்னல் வழியாகப் பார்த்தேன். கீழே இரண்டு பெண் ஜவான்களுக்கு மத்தியில் அவள் போய்க் கொண்டிருந்தாள். காரில் ஏறும்போது திரும்பி என் அறைப்பக்கம் பார்த்தாள். என்னே அறியாமலேயே என் கைகளே ஆட்டினேன்.

கார் புறப்பட்டது. என் கண்ணிலிருந்து சில விநாடிகளில் அது மறைந்தது.

ஆனுல் அவள் மறையவில்லே. 'காதல்' அதற்கு உள்ள மகத்துவம்தான் என்னே! எப்படிப்பட்ட பெண்களேயெல்லாம் எப்படிப்பட்ட நிலேகளில் கொண்டுவந்து நிறுத்துகிறது என்று எண்ணிக்கொண்டே சென்னேக்குப் புறப்பட்டேன்!



வினா-விடை

(1) வைதீகத்தில் பற்றுள்ள காங்கிரஸ்காரர்கள், பெரியாருடைய இராமாயண எதிர்ப்புப் பேச்சு பற்றி காமராஜரிடம் புகார் செய்தால், காமராஜர் என்ன சொல்லுவார்.?

உங்களுக்குத்தான் கிருபானந்தவாரியாரின் புராண காலட்சேபம் இருக்கிறதே, அங்கு போய் அதைக்கேட்டு உங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளுங்களேன் —அவரும் காங்கிரசை ஆதரிப்பவர்தானே — என்று பதில் கூறுவார்.

(2) பிறந்த பயனை நாம் பெறுவது எப்படி?

நம்மால் பிறர் பயன் அடையும் படியாக வாழ்வதன் மூலம்.

(3) ஒருவன் சிரிக்கும் போது சேர்ந்து சிரிக்கும் உலகம் அவன் அழும்போது மட்டும் விலகிப் போவது ஏன்?

பொதுவாக இப்படிச் சொல்லுவது உண்டு. ஆனால் இந்தப் பொல்லாத உலகில் ஒருவன் சிரிப்பதைக் கண்டே அழுபவர்களும், ஒருவன் அழுவதைக் கண்டே சிரித்து மகிழ்பவர்களும் இருக்கிறார்களே! ஆனால் பொதுவாக மகிழ்ச்சியில் பங்குகொள்ள முன்வருவதும், துன்பத்திலே பங்கு கொள்ளத் தயங்குவதும், பெரும்பாலானவர்களின் இயல்பாக இருக்கிறது.

(4) உலகில் அதிக நாளிதழ்களைக் கொண்ட நகரம் எது?

லெபனான் நாட்டுத் தலைநகரான பெய்ரூத். இந்த நகரில் மட்டும் 40 நாளிதழ்கள் உள்ளனவாம்.

(5) இரவிலே சூரியனைக் காண முடியுமா?

சூரியனைக் காணமுடியாத நேரத்துக்குத்தான் இரவு என்று பெயர். ஆனால் உலகிலே சில பகுதிகளில் இரவாக இருக்கும் சிலபகுதிகளில் பகலாக இருக்கிறது —அதாவது சூரியன் தெரிகிறது.

(6) குதிரைப் பந்தயம் எந்த நாட்டில் முதன் முதல் நடந்தது?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கிரீஸ், ரோம் ஆகிய நாடுகளில் குதிரைப் பந்தயம் நடைபெற்றதாகத் தெரிகிறது. கி. மு. 644 ல் நான்கு குதிரைகள் பூட்டிய ரதத்தை ஓட்டி, கிரேக்கர் பந்தயம் நடத்தி வந்தனர். கி. மு. 642-ல்தான் குதிரை மீதேறி அமர்ந்து பந்தயம் செலுத்தி நடத்தும் முறை தொடங்கிற்று.

(7) அமைச்சர் ராமய்யா எப்படிப் பட்டவர்?

ரொம்பவும் பொறுமைசாலி! எரிச்சல் எடுக்கும் விதமான குட்டு தலையில் விழுந்தாலும், துடைத்துக் கொள்ளக்கூட மாட்டார், பல்லைக்கடித்துக் கொண்டு பொறுத்துக் கொள்வார். எப்படி எனக்குத் தெரியும் என்று கேட்பீர்கள். பர்மாவிலுள்ள தமிழர் சங்கம், அங்குள்ள தமிழர்களுக்கு தமிழ்நாடு சென்றால் இனாமாக நிலம் கிடைக்கும், பணம் கிடைக்கும், வேலை கிடைக்கும், என்று ஆசை வார்த்தை சொல்லித் தூண்டிவிட்டதனால்தான் தமிழர்கள் பர்மாவை விட்டுக்கிளம்பி விட்டார்கள் என்று அமைச்சர் ராமய்யா சொன்னார். உடனே பர்மா தமிழர் சங்கம் சுடச்சுடப் பதில் கொடுத்தது. இது அபத்தப் பேச்சு, நாங்கள் அப்படி ஆசை வார்த்தை சொல்லி மக்களைத் தூண்டிவிடவில்லை என்று. அமைச்சர் அந்தக்குட்டு விழுந்தும் வாயை மூடிக்கொண்டார் பதில் காணோம்.

(8) ஆஸ்திரேலியா சென்று வந்ததில் என்ன பயன் என்று அமைச்சர் சுப்பிரமணியம் கூறுகிறார்?

ஆனந்த விகடனில் தொடர் கட்டுரை வெளியிட வசதிகிடைத்திருக்கும்! நாட்டுக்குக்கிடைக்கும் பலன் அதிகம் இருக்காது என்று அவரே கூறிவிட்டார். ஆஸ்திரேலியாவிலிருந்து அதிக அளவு கோதுமை வாங்கிவர எண்ணித்தான் சென்றாரும். ஆனால் அங்கே போதுமான மழை இல்லாததால் விளைச்சல் தரமாக இல்லையாம், ஆகவே எதிர்பார்த்த அளவு கோதுமை கிடைக்காதாம். ஆஸ்திரேலியாவிலே மழை போதுமான அளவு இல்லை. ஆகவே அங்கிருந்து அதிக அளவு கோதுமையைப் பெறுவதற்கில்லை என்பதை இங்கிருந்தே தெரிந்து கொண்டிருக்கலாம்— மற்றவர்கள்! மந்திரிகள் நேரில் போய்ப் பார்த்துவிட்டுத்தான் தெரிந்துகொள்வார்கள்!!

(9) மொரார்ஜி தேசாய், சில நாளைக்கு முன்பு கங்கையில் குளித்தாராமே பக்தியுடன்; பலன் என்ன காண்பார்?

குளித்தால் அழுக்குப்போகும் — அதுதெரியும் எனக்கு, மன அழுக்குப் போகும் என்கிறார்கள் கங்கையில் குளித்தால். கங்கையில் குளித்துப் போக்கிக்கொள்ள வேண்டியவிதமாக மன அழுக்கு மொரார்ஜிக்கு இருந்திருக்கலாம்; எனக்கென்ன தெரியும். முன்பு அவர் பத்ரிநாத் போய்வந்தார்; திரும்பிய பத்துநாளைக் கெல்லாம் இருந்த மந்திரி வேலையை இழந்துவிட்டார் அதுவும் தெரியும் எனக்கு.

(10) நந்தா, உள்துறை அமைச்சர் வேலையிலிருந்து விலகி விடப் போகிறாராமே?

ஏன்! சதாசர்சமிதியை நடத்திச் செல்லவா, அல்லது பாரத் சேவா சமாஜத்துக்கான ஒழுங்கான கணக்குகளை எழுதிக் காட்டவா! எதற்காக இப்போது உள்ள வேலையை விட்டு விலகப் போகிறார்!! காரணம், காணோமே.

3-ம் பக்கத் தொடர்ச்சி

பற்றி, மக்கள் இந்த அளவு அக்கறை காட்டினதில்லை.

வெற்றி பெற்ருல்கூட, கழகமா? வெற்றியா? சரி! அதனுல் என்ன? கழகம் வெற்றிபெற்றுவிட்டதால், காய் கனியாகிவிடப்போகிறதா, காகம் கானம்பாடப் போகிறதா! ஏனப்பா, கடுகை மலையாக்கிக் காட்டுகிருய்!! என்று பேசிடுபவரின் தொகைதான் மிகுதி.

இன்று நிலைமை அவ்விதம் இல்லை; கழகம் தேர்தலிலே ஈடுபடுகிறது என்ருல், கட்டாயம் வெற்றி தானே! இதிலென்ன அய்யப்பாடு எழமுடியும்!! என்று மக்களில் பெரும் அளவினர் பேசிக்கொளக் கூடிய கட்டம் தோன்றிவிட்டது.

கழகம், மக்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்டிருக்கிறது; கழகம் வெற்றிபெறத்தக்க ஆற்றலுடன் இருக்கிறது என்ற நம்பிக்கை மக்களிடம் மிகுந்திருக்கிறது; கழகம் வெற்றிபெறவில்லை என்ருல், மக்களுக்குத் திகைப்பு ஏற்படுகிறது, எனும் இவை பொருள் மிக்கன. நாம், மக்களின் பார்வையிலே இருக்கிருேம், மக்களின் பரிவு நம்மிடம் உறவுகொண்டிருக்கிறது என்பது பொருள்.

ஆகவேதான் தம்பி! தர்மபுரியில் கழகம் தோற்றுவிட்டது என்ற உடன், மல்லிகைக் கொடியின் முனை ஒடிந்திருப்பதைக் காணும்போது, மணிமாடச் சுவரிலே வெடிப்பு ஏற்பட்டுள்ளதைப் பார்க்கும்போது, பட்டுச் சட்டையிலே ஒரு சொட்டு மசி விழுந்திருப்பது காணும்போது, வீரன் கரத்திலே ஒரு வெட்டு வீழ்ந்திருப்பது தெரியும்போது, திருக்குறள் ஏட்டிலே மசிக்கூடு கவிழ்ந்தது காணும்போது, எப்படிப் பதறுவார்களோ, கவலைகொள்வார்களோ, அப்படிக் கவலை கொள்கிருர்கள், கழகத்தின் தோல்வியைக்கேட்டு.

செல்லாத நாணயத்தைத் தந்திரமாக, நல்ல நாணயம் என்று கடைக்காரனை நம்பச்செய்து தந்துவிட்டு, பொருள் பெற்றுக்கொண்டுவந்துவிடுபவன் அடையும் மகிழ்ச்சி காங்கிரஸ்காரர்களைப்பிடித்து உலுக்கியபடி இருக்கிறது, இப்போது!!

அதிலும், பலநாட்கள் பட்டினி கிடந்தவனுக்கு ஒரு நாள் விருந்து கிடைத்துவிட்டால், தின்னமுடியாத அளவுக்குத் தின்றுவிட்டுத் திணறுவார்களே, அந்த நிலைக்குச் சென்றுவிட்டார் முதல் அமைச்சர் பக்தவத்சலனுர்!

பல நாட்களாக, கொளுத்தினுர்கள் இடித்தார்கள், சுட்டார்கள் செத்தார்கள், ஓடினுர்கள் துரத்தினுர்கள், பிடித்தார்கள் அடைத்தார்கள், என்ற விதமான 'சுப சேதி'களையே கேட்டுக்கேட்டு, இடிந்துபோயிருந்தவரல்லவா, இப்போது வெற்றி என்றதும், தெருக்கூத்திலே காண்போமே, கலர்க்கண்ணுடித்துண்டுகள் பதித்த கிரீடமும், காக்காப் பொன்முலாம் பூசப்பட்ட கட்கமும், ஐந்தாறுவிதமான வர்ணத்துணிகளைச் சுற்றிவிடப்பட்ட ஆடை அலங்காரமும், பிசின்போட்டு ஒட்டப்பட்ட மீசை கிருதாவும்கொண்ட 'ராஜா' குதித்துக் கூவுவாரே, ராஜாதி ராஜன் வந்தேனே! மகா ராஜாதி ராஜன் வந்தேனே!! என்று அதுபோலாகிவிட்டார்!

வெற்றி! வெற்றி! வேட்டுச்சத்தம் கேட்ட நாட்டில், வெற்றி! வெற்றி! சுட்டுத்தள்ளிய சூரர்கட்கே வெற்றி! வெற்றி! என்று பாடுகிருர். பல நாள், பதைபதைத்துக் கிடந்தவர், இந்தப் பாயசம் பருகட்டும் பாவம்! வேண்டாம் என்பார் இல்லை. ஆனுல் இப்படித்தான் வெற்றி கிடைக்கும் என்று முன்பே தமக்குத்தெரியும் என்று பேசுகிருரே, அது தவறு, தேவையற்றது, பொருளற்றது!

ஆனுல் வெற்றிக்களிப்பிலே பொருள் பொருத்தம் பார்க்கவா தோன்றும்; ராமன் பிறவாததற்கு முன்னுலேயே இராமாயணம் எழுதினுராமே வால்மீகி, அது போலத் தம்மை எண்ணிக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிருர்.

காங்கிரஸ் வெற்றி பெற்றிருப்பது, அத்தனை பாராட்டத்தக்கதாகக் கொண்டாடத்தக்கதாக ஏன் தோன்றுகிறது? துளியும் எதிர்பார்த்திராததால்!!

தாளம் துளிகூடத் தவறவில்லை என்று பாராட்டுக் கிடைத்ததும், யாருக்கு பெருமையும் மகிழ்ச்சியும் கிளம்பும்? இசை மன்னன் சித்தூர் சுப்பிரமணியத்துக்கா!! இன்றைக்கு வரவேண்டிய வித்வான் வராததாலே, இலுப்பையூர் கருப்பையா பாடுவார்!! என்ற அறிவிப்புடன் பாடத்தொடங்கியவர், ஆனந்தத் தாண்டவம் ஆடுவார், தாளம் தவருமல் பாடியதாகப் பாராட்டப்பட்டால்.

பொதுத் தேர்தலுக்குப்பிறகு கழகம், காங்கிரசைச் சந்தித்த, தேர்தல் களம்,

அண்ணுவின்
கருத்தோவியம்

பாவையின் பயணம் ரூ. 1—50

அரசாண்ட ஆண்டி ரூ. 1—50

மதுரைக்கு டிக்கட் இல்லை ரூ. 2—00

கிடைக்குமிடம்!
பரிமளம் பதிப்பகம்,
சின்ன காஞ்சிபுரம்.

திருச்செங்கோடு

திருவண்ணமலை

சென்னைமாநகர்

தர்மபுரி

இவற்றில், முதல் மூன்று இடங்களிலும் காங்கிரஸ் தோற்கடிக்கப்பட்டது; தர்மபுரியிலே வெற்றிபெற்றது.

தாளம் தவறவில்லை என்று தட்டிக்கொடுப்பது போன்ற பாராட்டுதலுக்கு மட்டுந்தான் காங்கிரஸ் உரிமை கொண்டாடமுடியும். அதற்குமேலே கொண்டாடுவது, உப்பை அதிகமாக்குவதாகும்; மணம் நெடியாகிவிடும் நிலைமை!! ஆனால் அதைத்தான் முதல் அமைச்சர் செய்துவருகிறார் — மும்முரமாக!! நெடுநாளைக்குப்பிறகு புதிதாக வளையல்களைக் நிறையப் போட்டுக்கொண்டவள், குலுக்கி நடைநடந்து கலகல ஒலி எழுப்பிக் காட்டுவதுபோல.

மூன்று முறை கழகம் வெற்றிபெற்றபோது, இந்த 'முன்கூட்டியே' இன்னதுதான் நடக்கும் என்று கணித்திடும் வால்மீகி எங்கே போயிருந்தாரோ!!

இத்தனை பிணங்கள் வீழாதிருந்தபோது, மூன்று முறைக் காங்கிரசைத் தோற்கடித்த பொதுமக்கள், தர்மபுரியில் வெற்றிகொடுத்தார்கள் என்றால், காங்கிரசின் அடக்கு முறையைப் பாராட்டியா! மக்கள் என்ன இதயமற்றவர்களா!! அல்லவே!!

அடக்குமுறைப் பிரச்சினையைக்கூட மறைத்து விடத்தக்க வேறு ஏதோ நிலைமைகள் உருவாக்கப் பட்டதாலன்றோ, மக்கள் காங்கிரசுக்கு வெற்றி தந்தனர்! இதனைப் புரிந்துகொள்ள, சராசரி அறிவே போதுமே!

மக்கள் விரும்பவுமில்லை, எதிர்பார்க்கவுமில்லை; காங்கிரசின் பெருந்தலைவர்கள் எதிர்பார்க்கவில்லை; ஆனால் தொகுதியில் வேலை பார்த்துவந்த காங்கிரஸ் தலைவர்கள், தமது வேலை முறைகளைக் கணக்கெடுத்து வெற்றி கிடைத்திடும் என்று எதிர்பார்த்திருக்கக் கூடும்; அவர்கள் கூறியிருப்பார்கள் முதல் அமைச்சருக்கு; அப்போது அவரே அதை நம்பியிருந்திருக்க மாட்டார். நடந்துவிட்ட பிறகு பேசுகிறார், நமக்கு முன்பே தெரியும்!! என்று.

தம்பி! அவர்கள் அவ்விதம் பேசுவதாலே நமக்கு நட்டமில்லை; சொல்லப்போனால் நமக்கு ஒருவிதத்தில் அந்தவிதமான பேச்சு நல்லதுகூட.

நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்; நாடே எதிர் பார்த்தது நாம் வெற்றி பெறுவோம் என்று. ஆனால் நாம் தோற்கடிக்கப்பட்டிருக்கிறோம்.

இதனை நாம் மறத்தலாகாது, நினைவினிற் கொள்ள வேண்டும்; எதற்கு? மக்களின் இதயம் நமது பக்கம் என்று அறிந்து அகமகிழ்ந்து நம்பிக்கை கொண்டு விடுவது மட்டும் போதாது; வெற்றிக்கான முறைகளைச் செம்மைப்படுத்திக் கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சியைப் பெறுவதற்காக.

தேர்தலிலே மட்டுமல்ல, எடுத்த காரியம் எதிலும் தொட்டது அத்தனையும் பலித்துவிடும் என்று நிலைமை இருந்துவிடுவதில்லை. ஏமாற்றங்களும், இடையூறுகளும் எவருடைய பாதையிலும் ஓரோர் வேளை குறுக்கிடத்தான் செய்யும். தோல்விகளையும் சந்தித்திட வேண்டும்; துணிவுடன். ஒரு பட்டியல் தருகிறேன், பார் தம்பி!

1831—வியாபாரத்தில் தோல்வி

1832—சட்டசபைத் தேர்தலில் தோல்வி.

1833—மீண்டும் வியாபாரத்தில் தோல்வி,

1834—சட்டசபையில் பதவி.

1835—காதலியின் மரணம்.

1836—நரம்புக் கோளாறு நோய்.

1838—சட்டசபைத் தலைவர் தேர்தலில் தோல்வி.

1840—எலக்டர் தேர்தலில் தோல்வி.

1843—பெருமன்றத் தேர்தலில் தோல்வி,

1846—பெருமன்றத் தேர்தலில் வெற்றி.

1848—பெருமன்றத் தேர்தலில் தோல்வி.

1855—செனட் தேர்தலில் தோல்வி.

1856—உதவி ஜனாதிபதித் தேர்தலில் தோல்வி.

1858—செனட் தேர்தலில் தோல்வி.

1860—ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி.

இந்தத் தோல்வி—வெற்றி பற்றிய பட்டியல் எவருடையது தெரியுமா தம்பி! இறவாப் புகழ் பெற்றுவிட்ட ஆபிரகாம் லிங்கனுடையது!

ஆமாம்! தம்பி! அத்தனை தோல்விகளைக் கண்டிருக்கிறார் ஆபிரகாம்லிங்கன். எத்துணை உள்ள உரம்! அந்தத் தோல்விகளைக் கண்டு மனம் உடைந்திடாமல், முயற்சியிலே மேலும் மும்முரம் காட்டி, அமெரிக்கக் குடிஅரசுத் தலைவராகி இறவாப் புகழ்பெற்றுக் காட்டினார். ஒவ்வொரு முறை அவர் தோற்றபோதும் அந்த நாட்டுப் பக்தவத்சலங்கள் என்னென்ன பேசியிருப்பார்கள்! தொலைந்தான்! தொலைத்துவிட்டோம்!! என்று எத்தனைபேர் முழக்கம் எழுப்பியிருப்பர்? ஆபிரகாம் லிங்கனுடைய நண்பர்களேகூட, இந்தத் தோல்விகளைக் கண்டபோது, இவ்வளவு தகுதியுள்ளவரைத் தேர்ந்தெடுக்காத இந்த மக்களை என்ன சொல்வது! இப்படிப்பட்ட மக்களை நம்பி யார்தான் எந்த நல்ல காரியத்தைத்தான் செய்ய முற்பட முடியும்! என்றெல்லாம் பேசியிருந்திருப்பார்கள். ஆயினும் ஆபிரகாம் லிங்கன், இந்தத் தோல்விகளைக் கண்டு, துயர்துளைக்கும் மனதினராகிவிடவில்லை. மக்களின் நல்லாதரவு கிடைக்கும்வரையில், அதற்காகப் பாடுபடுவது தமது கடமை என்ற உணர்வுடன் பணியாற்றினார்; திராவிட முன்னேற்றக் கழகம், பொதுமக்களின் நல்லாதரவைக் கேட்டிடும் பணியினை ஓர் கடமை எனக்கொள்ள வேண்டும். மக்கள் தமது நல்லாதரவை நமக்குத் தராமலும் இல்லை. தர்மபுரியில் நமக்கு அந்த நல்லாதரவு

கிடைக்காமற் போனதற்கான காரணத்தை, கழகத் தோழர்கள் கண்டறியவேண்டும்; நமது வேலை முறைகளிலே இருந்திடக்கூடிய குறைபாடுகளைக் களைந்திடுவதிலே கவனம் செலுத்தவேண்டும். நமது தோல்வி, நமக்கு மட்டுமின்றி, நமது கழகத்திற்கு வெளியே உள்ள இலட்சக் கணக்கான மக்களுக்கெல்லாம், எவ்வளவு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது என்பதை அறியும்போது, கவலையைவிட, ஒரு புதுவித நம்பிக்கையே நமக்குத் தோன்றும்-அத்துணை மக்கள் நமது வெற்றியை எதிர்பார்த்தபடி உள்ளனர் என்பது புரிவதால்.

பொது உண்மையை அனைவரும் அறிவர்; ஆளுங் கட்சிக்குக் கிடைக்கக்கூடிய சில வசதிகளும், வாய்ப்புகளும், எதிர்க்கட்சிகளுக்குக் கிடைக்காது. ஆம்எனில் அதற்கு என்ன பரிகாரம்? அந்த வசதிகளையும் வாய்ப்புகளையும்கொண்டு ஆளும்கட்சி சாதித்துக்கொள்வதை நாம் நமது பரிவினைக்காட்டி, தோழமையைக்காட்டி, தூய்மையைக் காட்டி, முயற்சியின் மூலம், பெற்றிட வேண்டும்; பெற்றிட முடியும்; பெற்றிருக்கிறோம்; தருமபுரியில் பெறத் தவறிவிட்டோம்.

ஆளுங்கட்சி அதிகாரபலத்தைக் காட்டி ஏழை எளியவர்களை மட்டுமல்ல, வணிகர்களை, அலுவலகப் பணியாளர்களை, மயக்கவும், மிரட்டவும் முடிகிறது. அதனால்தான், அமைச்சர்களாக இருந்துகொண்டே பொதுத்தேர்தலை நடத்துவதைக் கண்டித்தோம்; தேர்தலுக்குச் சில மாதங்களுக்கு முன்பாகிலும், மந்திரிப் பதவிகளை ராஜினாமாச் செய்திட வேண்டும் என்று கேட்டுக்கொண்டோம். காங்கிரஸ் அமைச்சர்கள் ஒப்புக்கொள்ளவில்லை.

இடைத் தேர்தலின்போது, நாம் அந்த யோசனையைக்கூடக் கூறமுடியாது; பொருளில்லை.

இடைத் தேர்தலிலே பெரும்பாலும் ஆளுங்கட்சி வெற்றியைத் தட்டிப் பறித்துக்கொள்ளும் வாய்ப்புப் பெறுகிறது. வருபவர் யார்? மந்திரி! கேட்பது என்ன? ஓட்டு! கொடுக்காவிட்டால்? கோபம்! கோபம்வந்தால்? என்னென்ன செய்வாரோ! நமக்கேன் அவர்களின் பொல்லாப்பு!! — இது பொதுவாக மக்களின் மனப்போக்கு. இதை மீறித்தான் எதிர்க்கட்சிகள் வெற்றி பெற்றிட வேண்டும்.

எதிர்கட்சிக்குத் தருகிற 'ஓட்டு' உடனடியான பலனை எதிர்பார்த்து அல்ல!

ஆளுங்கட்சினர் 'ஓட்டு' கேட்கும்போதோ, உடனடியாகப் பலன் தருவதாகச் சொல்லுகிறார்கள்; மக்கள் நம்பவும் செய்கிறார்கள்.

> "பெண்கள் கல்லூரி வேண்டும், வேண்டும் என்று பல வருஷங்களாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். இன்னும் ஏற்பாடாகவில்லை"

என்று தர்மபுரிப் பிரமுகர்கள், கழகத் தோழர்களிடம் கூறும்போது, கழகத் தோழர்கள் என்ன சொல்லுவார்கள்,

> சட்டசபையில் இதைப்பற்றிக் கட்டாயம் பேசுகிறேன். கல்லூரி அமைக்காதிருக்கும் போக்கைக் கண்டிக்கிறேன். இந்தத் தேர்தலில் காங்கிரசைத் தோற்கடித்துக் காட்டினால், காங்கிரஸ் மந்திரிகளுக்குப் பயம் ஏற்படும்; அப்போது கல்லூரிக்கு வழி பிறக்கும்."

இதைத்தான் சொல்லுவார்கள்; முறை. அமைச்சர் ராமய்யாவிடம் அதே தருமபுரிப் பிரமுகர்கள் அதே கல்லூரி விஷயமாகக் கேட்டால், அவரால் என்னென்ன சொல்ல முடியும் என்பதை எண்ணிப் பாரேன், தம்பி!

> "கல்லூரியா! பெண்கள் கல்லூரியா! ஏற்படுத்தலாமே! அதிலென்ன கஷ்டம்! எத்தனையோ கல்லூரிகள் ஏற்படுத்தி இருக்கிறோமே இங்கே எந்த இடம் நல்ல இடம், கல்லூரிக்கு?

இவ்விதம் பேசமுடியும்; பேசுகிறார்கள். உள்ளம் பூரிக்கிறது பிரமுகருக்கு.

> இருக்கிறது நல்ல இடம்; ஊருக்கு மையமாக; ஒரே சதுரம்; அறுபது ஏக்கர்.

என்கிறார் என்று வைத்துக் கொள்ளேன், உடனே மந்திரியின் மோடார் கிளம்புகிறது; ஜீப் முன்னாலே பறக்கிறது; பக்கத்தில் பிரமுகர்; இடத்தைப் பார்வையிடச் செல்கிறார்கள்.

> "உங்க பேட்டை ஓட்டு எப்படி?"

என்று அந்தச் சமயத்தில் மந்திரி கேட்டால் என்ன பதில் வரும்?

> "எல்லாம் 'ஐயா' சொல்கிறபடிதான்! காங்கிரசுக்குத்தான்"

இடத்தைப் பார்வையிடுகிறார்கள்; தரமான இடம் என்கிறார் மந்திரி; ஆமாம்! என்கிறார் அதிகாரி; அக மகிழ்ச்சி பிரமுகருக்கு; கல்லூரி வந்துவிடும் என்பதனாலே மட்டுமல்ல; நெடுநாளாக விலை போகாதிருந்து வந்த அந்த நிலத்தை நல்ல விலைக்கு விற்றுவிட முடியும் என்பதால்; நிலம் பிரமுகருடையது; இந்த விவரம் விளக்கப்பட்ட பிறகு அந்தப் பிரமுகர், ஐம்பது பேர் சுட்டு வீழ்த்தப்பட்டார்களே அந்தக் கொடுமையையா எண்ணிக் கொண்டிருப்பார்; ஏகர் ஐயாயிரம், அறுபது ஏகர்! மொத்தத்தில் 3 இலட்சம்!! இந்தக் கணக்கிலே அல்லவா அவர் உலவிக்கொண்டிருப்பார். மகனை இழந்த மாதா கதறுவதா காதிலே கேட்கும்? புதுப்புது

நோட்டுகளை எண்ணும்போது எழுகிறதே இன்பநாதம், அது!!

தம்பி! நாம், மக்களின் இதயம் நமது பக்கம், ஆகவே தேர்தலிலே வெற்றி நமது பக்கம் என்று எண்ணிக்கொண்டிருக்கும்போது, காங்கிரசாட்சியின் கொடுமைகளை எடுத்துப் பொதுமக்களிடம் விளக்கிக் கொண்டு இருக்கும்போது, இந்தக் கல்லூரிப் பிரச்சினை படை எடுத்து, நமக்கு வரவேண்டிய ஓட்டுகளை, விழுங்கிக்கொண்டிருக்கிறது.

பண்புள்ள ஜனநாயக நாடுகளில், அமைச்சர்கள் தேர்தலின்போது—அதிலும் இடைத் தேர்தலின்போது—அதைச் செய்து தருகிறோம், இதை நிறைவேற்றிக் கொடுக்கிறோம் என்று வாக்களிக்கமாட்டார்கள். முறையல்ல என்பதால்.

தர்மபுரியில் நடந்தது என்ன?

சேலம் மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும் போது, புதிய மாவட்டத்துக்கு எது தலைநகர், கிருஷ்ணகிரியா? தருமபுரியா? என்கிற பிரச்சினை அங்கு. ஓட்டு கேட்க வந்த அமைச்சர்கள்,

தருமபுரியைத் தலைநகர் ஆக்கித் தருகிறோம்

என்று, அங்கேயே அறிவித்திருக்கிறார்கள். தருமபுரியில் பிரமுகர்களும், வணிகர்களும், எப்படி அதிலே மயங்காதிருக்க முடியும்!

முழுக்கணக்கு எனக்குக் கிடைக்கவில்லை என்றாலும், தருமபுரியைத் தலைநகர் ஆக்குகிறோம் என்று தேர்தல் நேரத்தில் காங்கிரசார் வாக்களித்த காரணத்தால், தருமபுரி வட்ட ஓட்டுகள் நமக்குக கிடைத்திருக்க வேண்டியவை, காங்கிரசுக்கு விழுந்துள்ளன என்பது தெரிகிறது.

தம்பி! தருமபுரி தொகுதி மூன்று பிரிவுகள் கொண்டது; ஒன்று காரிமங்கலம் வட்டம்; இரண்டாவது தருமபுரி வட்டம்; மூன்றாவது நல்லம்பள்ளி வட்டம்.

கடந்த பொதுத் தேர்தலில், காங்கிரஸ் வேட்பாளராக நின்றவர் நல்லம்பள்ளிவட்டம் பாளையம் புதூர் கந்தசாமி கவுண்டர். கழகவேட்பாளர், தருமபுரி வட்டம்; வெற்றிபெற்ற சுயேச்சையாளர் வீரப்பசெட்டியார் காரிமங்கலம் வட்டம்.

ஆகவே காரிமங்கலம் வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெருமபாலானவை, வீரப்பசெட்டியாருக்கு, நல்லம்பள்ளி வட்டத்து ஓட்டுகளில் மிகப் பெரும்பாலானவை காங்கிரஸ் வேட்பாளர் பாளையம் புதூராருக்கு, கழக வேட்பாளரான சுப்பிரமணியம் அவர்களுக்கு, தருமபுரி வட்ட ஓட்டுகளில் மிகப் பெரும்பாலனவை விழுந்தன.

கடந்த பொதுத் தேர்தலில் கிடைத்ததைவிட இம் முறை காரிமங்கலம் வட்டத்திலும், நல்லம்பள்ளி வட்டத்திலும் (நான் அறிந்தவரையில்) கழகத்துக்குக் கிடைத்திருக்கிறது; ஆனல் தருமபுரி வட்டத்து ஓட்டுகள் கழகத்துக்குக் குறைந்துவிட்டன.

காரணம் என்ன இருக்கமுடியும்? தலைநகர்!!

இந்த ஆராய்ச்சி செய்துகாட்டி தோல்வியை மறைத்திட ஒரு திரை நெய்துகொண்டிருக்கிறேன் என்று எவரும் எண்ணிக்கொள்ளவேண்டாம் இந்த விவரம் கூறுவதற்குக் காரணம், தேர்தலின்போது, நாம் துளியும் எதிர்பாராத, புதிய நிலைமைகள் வடிவமெடுத்து, எதிர்பாராத விளைவுகளை உண்டாக்கிவிடக் கூடும் என்பதை விளக்குவதற்காகவே.

ரஷியாவிலே, நெப்போலியன் படுதோல்வி அடைந்ததற்கான பல காரணங்களிலே ஒன்று என்று இன்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள், நெப்போலியன ரஷியா மீது படை எடுத்துச் சென்ற சமயத்தில், வழக்கமாக ஆரம்பமாகிற பனிக்காலம் பத்துநாள் முன்னதாகவும், வழக்கத்தைவிடக் கடுமையாகவும் ஆரம்பித்தது ஆபத்தாக முடிந்தது என்கிறார்கள்.

களத்திலே ஏற்பட்டுவிடும் தோல்விகள், படை பலத்தை மட்டும் நம்பிக்கொண்டிருந்தால் போதாது, முறைகளையும் செம்மையாக்கிக்கொள்ள வேண்டும் என்ற பாடம் தருவன. அந்த முறையில், தருமபுரித் தேல்வியை நாம் பயன் படுத்திக்கொள்ள வேண்டும்.

மக்களின் இதயம் வென்றிட நாம் எடுத்துக் கொண்ட முயற்சி நாம் பெருமிதம்கொள்ளத்தக்க வெற்றியைக் கொடுக்கிறது. நமக்குக் கிடைத்துள்ள இந்த வலிவினைச் சிதைத்திட, ஆளுங்கட்சியான காங்கிரஸ் என்னென்ன நிலைமைகளை உருவாக்கும், என்னென்ன முறைகளை மேற்கொள்ளும் என்பன பற்றி விழிப்புடனிருந்து கண்டறிந்து அவைகளையும் முறியடிக்கத்தக்க விதமாக நமது முறைகளைச் செம்மைப் படுத்திக்கொள்ள வேண்டும். இதற்காகவே இத்தனை கூறினேன்.

அண்ணன்,



உங்கள் சரக்குகளை சென்னையிலிருந்து
எங்கு அனுப்பவேண்டி இருந்தாலும்
எங்களுக்கு போன்மூலமோ கடிதம்
மூலமோ தெரியப்படுத்துங்கள்.

ஸ்டேண்டர்டு ரோடுவேஸ்,
18, டேவிட்சன் தெரு,
சென்னை-1.
போன் நெ. **29834**

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனல் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என். அண்ணுதுரை.